DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 63/2022
Miscellaneous :
Sessions : PW-1
Deposition of Witness for

**எதிரி ஆஜர் இல்லை.மனுதாக்கல் செய்யபட்டது.**

| | |
|---|---|
| Name | சாய்பிரசாத் |
| Father/Husband Name | பாஸ்கரன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **23 .02.2024**

**குறுக்கு விசாரணை**

**1.** நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். வருட வருமானம் எனக்கு எவ்வளவு வரும் என்றால் 6ல் இருந்து 6 1/2 லட்சம் வரும். விவசாயம் தவிர வேறு வருமானம் எனக்கு இல்லை. எனக்கு சேமிப்பு பழக்கம் இருக்கிறதா என்றால் இல்லை. எனக்கு ஒரு வங்கி கணக்கு இருக்கிறது. சிட்டி யூனியன் வங்கி கிளை மேலவளம் பேட்டையில் கணக்கு வைத்திருக்கிறேன். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரி மதுராந்தகத்தில் ஆண்டாள் ஸ்டோர் அருகில் ஆர்சிஎஸ் என்ற ஜீஸ் கடை வைத்திருக்கிறார். நான் அங்கு அடிக்கடி செல்வேன். அதனால் பழக்கம். அந்த ஜீஸ் கடை மதுராந்தகத்தில் 2018ம் ஆண்டில் இருந்து இருக்கிறது. அதற்கு முன்னர் செங்கல்பட்டில் வைத்திருந்தார். எதிரியின் முழு பெயர் சொல்லமுடியுமா என்றால் குமார் ஆகும். எதிரியின் அண்ணன் பெயர் தெரியுமா என்றால் தீனதயாளன் ஆகும். அவரை தீனா என்றும் அழைப்பார்கள். எதிரியின் கடையில் நான் அங்கு விற்பனையாகும் பழச்சாறுகளுக்கு பணம் வாங்கி கல்லா பெட்டியில் போடும் அளவிற்கு பழக்கமானவர்கள் என்றால் அவ்வாறு நான் செய்யவில்லை.

2. எதிரிக்கு வியாபாரத்திற்காக பணம் கொடுத்ததாக கூறியிருக்கிறேன் என்ன வியாபாரம் என்று சொல்ல முடியுமா என்றால் பழச்சாறு கடைக்காக கொடுத்தேன். எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 10.10.2021ல் கொடுத்தேன். ஒரே தவணையாக 5லட்சம் ரூபாயை கொடுத்தேன். எதிரியின் கடையில் வைத்து ரொக்கமாக கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் அநத கடையில் வேலை செய்யும் நபர்கள் இருந்தார்கள். எனக்கு தெரிந்தவர்கள் யாரும் இல்லை. என்ன வகையான பணத்தாள்கள் கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் தாள்கள் ஆக கொடுத்தேன். மேற்படி தொகை எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால்

நான் நெல் விற்பைன செய்த தொகையை கொடுத்தேன். அந்த தேதியில் நான் நெல் விற்பனை செய்ததால் எனக்கு மேற்படி தொகை கிடைத்தது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எனது பெயரில் விவசாய நிலம் இல்லை. எனது அப்பா பெயரில் இருக்கிறது. எதிரிக்கு நான் பணம் கொடுத்த அன்றே எனக்கு காசோலையை கொடுத்தாரா என்றால் இல்லை. 10.12.2021ம்தேதி காசோலை கொடுத்தார். எதற்காக பணம் கொடுத்த அன்று காசோலையை வாங்கவில்லை என்றால் பணம் தருவதாக சொல்லி காலம் தாழ்த்தினார். எனக்கும்எதிரிக்கும் வங்கி மூலம் பண பரிவர்த்தனை நடந்துள்ளதா என்றால் இல்லை.

3. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் காசோலையை எதிரி யார் பெயருக்கு கொடுத்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.10.12.2021 ல் கொடுக்கபட்ட காசோலையை 2022 ம் ஆண்டு வங்கியில் தாக்கல் செய்ய காரணம் உண்டா என்றால் எதிரி பணத்தை கொடுப்பதாக சொல்லியிருந்தார். பணம் கொடுக்காததால் காசோலையை போட்டேன். காசோலை திரும்பிய விவரத்தை எதிரிக்கு மார்ச் மாதம் சொன்னேன். 08.03.2022 ம் தேதியில் திரும்பவும் வங்கியில் காசோலையை செலுத்தினேன். 2 வதாக காசோலை திரும்பிய விவரத்தை எதிரியிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். 5 லட்சம் ரூபாயை வட்டிக்காக கொடுத்தேனா என்றால் இல்லை . கைமாத்தாக கொடுத்தேன். வழக்கு காசோலையில் உள்ள விவரங்கள் வெவ்வேறு மையினால் வேறு வேறு நபர்களால் எழுதப்பட்டது என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரிக்கு நான் கடன் கொடுக்கவில்லை என்றாலும் எதிரியின் கடையில் அவர் தனது வியாபாரத்திற்காக வைத்திருந்த காசோலையை நான் எடுத்து பூர்த்தி செய்து தவறான வழக்கிற்காக தாக்கல் செய்தேனா என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டு கொண்ட நிலையில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**